தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 சனவரி 28

(தை 15, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு—2014)

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்''

சொற்கள் பொருளைப் புலப்படுத்தும் வகைகளை அறிந்த தெளிவினை உடையோர், அவையின் மரபினையும் அவையோரின் இயல்புகளையும் அறிந்து அவ்விடம் சொல்லத் தகுந்த சொற்கள் யாவை என்பதை ஆராய்ந்து அறிந்து சொல்லுதல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

நியாயவிலைக் கடைகளில் புகார் புத்தகம் வைக்கும் திட்டம்.

*வினா எண். 21 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா ரேஷன் கடைகளிலும் புகார் புத்தகம் வைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா நியாய விலைக் கடைகளிலும் புகார் புத்தகங்கள் வைக்கப்பட வேண்டுமென ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. சமீபத்தில் புகார் புத்தகங்களுக்குப் பதில் புகார் பெட்டிகள் வைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் பொருட்களின் அளவு குறைக்கப்பட்டிருப்பதாகப் புகார் இருக்கிறதா? ஏற்கனவே கொடுக்கப்பட்ட அளவுதான் இப்போதும் கொடுக்கப்படுகிறதா? தற்பொது கொடுக்கப்படும் அளவே தொடர்ந்து கொடுக்கப்பட முடியும் என்று அரசு எதிர்பார்க்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சிலபல திங்கள்களாகக் கொடுக்கப்பட்டு வந்த அதே அளவிலேதான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதே அளவிலே கொடுக்கப்பட வேண்டுமென்ற

முயற்சியிலேதான் உணவுத் துறை ஈடுபட்டுக் கொண்டு வருகிறது. அதைக் குறைக்கின்ற எண்ணம் இப்பொழுது இல்லை. எதிர் காலத்திலே ஏற்படுகின்ற நெருக்கடித் தன்மைகளைப் பொறுத்துத் தான் முடிவெடுக்க வேண்டுமே தவிர இப்பொழுது அதே அளவு தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரிசியின் விலைகளும் இதர பொருட்களின் விலையும் இப்பொழுது தாறுமாறாக ஏறிக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் மக்கள் ரேஷன் கடைகளை நோக்கி அதிகமாக வருவதால் தற்பொழுதிருக்கும் கடைகளை உயர்த்தும் முறையிலே 500 குடும்பங்களுக்கு ஒரு ரேஷன் கடை என்று வைக்க அரசு உத்தரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்பொழுதிருக்கின்ற சூழ்நிலையில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை. முதலிலே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கார்டுகள் இருக்கும் கடைகளை மட்டும் இரண்டாகப் பிரிக்கலாம் என்ற முயற்சியை எடுத்துக் கொண்டு வருகிறது. இப்பொழுது 17,500-க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகளை வைத்திருக்கிறோம். அதிகமாகக் கார்டுகள் இருந்து அதிக நெருக்கடி ஏற்படும் கடைகளை இரண்டாகப் பிரிக்கின்ற முயற்சிகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நிதி ஆதார வசதிகள் ஏற்படுகின்ற சூழ்நிலையில்தான் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை படிப்படியாக மேற்கொள்ளப்பட வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது கிராமங்களில் இருக்கின்ற ரேஷன் கடைகளில் ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 5 கிலோதான் அரிசி கொடுக்கப்படுகிறது. அரிசி விலை அதிகமாக ஏறிவரும் நிலையில் இந்த ரேஷன் அரிசியை இன்னும் அதிகப் படியாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுதிருக்கின்ற நெருக்கடியில் இதைக் குறைக்காமல் இருந்தாலே நல்லது என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறதே தவிர இதை அதிகப் படியாக ஆக்குகின்ற சூழ்நிலை இப்பொழுது இல்லை.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று உணவு நெருக்கடியும், மற்ற பொருட்களின் விலையேற்றமும் இருக்கின்ற நேரத்திலே நியாய

1983 சனவரி 28] [திரு. என். வரதராஜன்]

விலைக் கடைகளில், அதாவது ரேஷன் கடைகளில் புகார்ப் பெட்டிகள் வைப்பதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, அத்தியாவசியமான பொருட்களை மக்களுக்குக் கொடுக்கும் வகையில் கண்காணிப்பதற்கான குழுக்களை அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆங்காங்கு குழுக்கள் அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வட்ட அளவில் முக்கியமாக ஆங்காங்கு இருப்பவர்களைக் கொண்டு குழுக்கள் வைத்து, அங்கே தவறுகள் இருந்தால் அவர்கள் கண்டறிந்து மேலதிகாரிகளுக்குச் சொல்லலாம் என்ற வகையிலே அமைக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில பல இடங்களில் அப்படி அமைத்தும் இருக்கிறார்கள். அவ்வாறு அமைக்காத இடங்களில் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் ஒரே பெருங்குழு அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. புகார்ப் புத்தகங்கள் வைக்கின்ற நேரத்திலே அதில் புகார்களைத் தெரிவிப்பதற்குப் பலரும் அஞ்சுகிறார்கள். காரணம் யாரைப் பற்றிக் குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றனவோ அவர்களே அந்தப் புத்தகங்களைக் காணுகின்ற சூழ்நிலை இருப்பதால் அதில் எழுதுவதற்கு அஞ்சுகிறார்கள். எனவேதான் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டு அந்தப் பெட்டியில் புகார்களைப் போட வேண்டும். மேலதிகாரிகள் வாரத்திற்கு ஒரு தடவை அதைத் திறந்து அதிலே இருக்கின்ற குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே தான் புகார் பெட்டிகள் வைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட் டுள்ளது.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தக் கடைகளில் புகார் பெட்டிகள் வைப்பது சம்பந்தமாக சில விவரங்களைச் சொல்லி இருக்கிறார்கள். இதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள் சரியாக கூடுவது இல்லை. முதல் கூட்டம் மட்டும்தான் நடந்திருக்கிறதே தவிர, அதற்குப் பிறகு கூட்டமே கூடவில்லை. இப்படி காலம் கடத்துவதைத் தவிர்த்து, மாதம் ஒரு முறை இந்தக் கூட்டத்தைக் கூட்டி, வங்கிகளின் சார்பாக அமைக்கப்பட்ட கடைகளிலும், அரசு நியாயவிலைக் கடைகளிலும் நடைபெறுகின்ற ஊழல்களை, தகராறுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு அமைக்கப்பட்டதன் நோக்கமே குறைபாடுகள் நியாயவிலைக் கடைகளில் ஏற்படாமல்

இருப்பதற்காகத்தான். அவைகளை, அந்தக் குழு ஆராய்ந்து எடுத்துச் சொல்லுமானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் சூழ்நிலையில், அங்கே பணிபுரிபவர்கள் செம்மையாகவும், சிறப்பாகவும் பணியாற்ற வழிவகை ஏற்படும். ஒருமுறை கூட்டம் கூடி மறுமுறை அந்தக் கூட்டம் கூட்டப்படாமல் இருப்பது நல்லதல்ல. முறைப்படி கூட்டப்பட வேண்டுமென்று தான் அறிவுரை கூறியிருக்கிறோம். ஆனால், இவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டுமென்ற வரைமுறை எதுவும் வைக்கப்படவில்லை. எனினும், இந்தக் குழு குறிப்பிட்ட கால அளவுக்குள் கூட்டப்பட வேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, இதை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

திரு என். பழனிவேல்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளிலே புகார் பெட்டிகள் வைப்பதாகச் சொன்னார்கள். அதனால் பிரச்னைத் தீர்ந்து விடாது. இப்பொழுது தாலூகா மட்ட அளவிலே குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழுக்களிலே அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை. அந்த அதிகாரிக்குத் தெரிந்த, 30 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகமான நபர்கள்தான் அந்தக் குழுவிலே உள்ளார்கள். அப்படியில்லாமல், அரசியல் கட்சியைச் சேர்ந்த நபர்களைப் போட்டு தாலூகா மட்டத்தில் அல்லாமல் குறுகிய அளவிலே போட்டால், பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் (விடை இல்லை.)

சென்னையில் மீன்காட்சி சாலை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 22—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மீன்காட்சி சாலை நடத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மெரினா கடற் கரையில் தற்போது ஒரு மீன்காட்சிசாலை உள்ளது. மேலும் மெரினா கடற்கரையில் ஒசுனேரியம் (oceanarium) என்னும் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்காட்சி சாலை மெரினாவில் உள்ளது என்று சொன்னார்கள். சில இடங்களில் மக்களுடைய உணவை நல்லமுறையிலே சுவையாகச் செய்து, விநியோகிக்கின்ற ஸ்டால்கள் இருந்தாலும் அதைப் பரவலாக்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அக்வேரியம் என்று சொல்லப்படுவது மீன்காட்சி சாலை. அதிலே, விதவிதமான, வண்ணவண்ண, வகை வகையா